ரூ. 2 கோடி அளிப்பு...

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு டாடா நிர்வாகம் சார்பில் ரூ. 2 கோடிக்கான காசோலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வழங்கிய டாடா நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவின் தலைவர் தீபேஷ் நந்தா மற்றும் நிர்வாக உறுப்பினர்கள். உடன், நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி.

171 தொழிலாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம்

எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, அக்.9: அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நலிந்த 171 தொழிலாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் வழங்கப்படும் என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

உழைப்பாளர் தினமான மே தினத்தை முன்னிட்டு, அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் உறுப்பினர்களாக உள்ளவர்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நலிந்த தொழிலாளர்களுக்கு குடும்ப நல நிதியுதவி வழங்கும் திட்டம் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிகழாண்டு மே தினத்தின் போது,மக்களவை பொதுத்தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் அப்போது நிதியுதவி வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்நிலையில், அதிமுகவின் அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களிலிருந்தும், புதுச்சேரி, கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய பிற மாநிலங்களில் இருந்தும், போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்கங்களில் இருந்தும், தேர்ந்தெடுக்கப்பட்ட 171 நலிந்த தொழிலாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் மொத்தம் ரூ.1.71கோடி குடும்ப நல நிதி உதவி வழங்கப்படும்.

அதிமுக 53-ஆவது தொடக்க நாளான அக். 17-இல் காலை 10.30 மணிக்கு ராயப்பேட்டை தலைமைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வில் இந்த நிதி உதவி வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

5 பேர் உயிரிழப்பு: மனித உரிமை ஆணையத்திடம் அதிமுக புகார் மனு

சென்னை, அக்.9: மெரீனா கடற்கரையில் நடைபெற்ற விமானப்படை சாகச நிகழ்ச்சியின்போது 5 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து, தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அதிமுக சார்பில் புதன்கிழமை புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது.

அதிமுகவின் வழக்குரைஞர் பிரிவு செயலரும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினருமான ஐ.எஸ். இன்பதுரை, தில்லியில் உள்ள தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு இந்தப் புகார் மனுவை அனுப்பியுள்ளார். மனுவில் கூறியிருப்பது:

இந்திய விமானப் படையின் 92-ஆவது ஆண்டு தினத்தையொட்டி, சென்னை மெரீனா கடற்கரையில் நடைபெற்ற சாகச நிகழ்ச்சியின் போது நேர்ந்த துயரச் சம்பவத்தைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

தமிழக அரசு மற்றும் இந்திய விமானப் படை சார்பில் சாகச நிகழ்ச்சி பெருவாரியாக விளம்பரம் அளிக்கப்பட்டு, மக்கள் வரவழைக்கப்பட்டனர். லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் வகையில் 15 லட்சம் பேர் சென்னை மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் நிகழ்ச்சிக்கு குவிந்தனர்.

ஆனால், அந்த மக்களுக்கு போதுமான போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, அவசர உதவிக்கான மருத்துவக்குழுக்கள் அரசால் முறையாக அளிக்கப்படவில்லை. இந்த நிலையில், சாகச நிகழ்ச்சியைப் பார்வையிட்ட 5 பேர் உயிரிழந்துள்ளனர். நீர் இழப்பு காரணமாக 200 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவை அனைத்துக்கும் அரசு முறையாக மேலாண்மை பணிகளை மேற்கொள்ளாததுதான் காரணம்.

எனவே, 5 பேர் உயிரிழந்த விவகாரம் குறித்தும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காதது குறித்தும், முறையான திட்டமிடல்கள் இல்லாதது குறித்தும் தேசிய மனித உரிமை ஆணையம் முழுமையான விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

சுற்றுலா வேன் – ஜீப் மோதல்: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழப்பு

திருப்பூர், அக். 9: திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே ஜீப் மீது சுற்றுலா வேன் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி இந்திரா நகரைச் சேர்ந்தவர் தியாகராஜன் (45). இவர் தனது மனைவி ப்ரீத்தி (40), மகன்கள் ஜீவப்பிரியன் (13), ஜெயபிரியன் (11), தியாகராஜனின் தந்தை நாட்ராயன் (75), தாய் மனோன்மணி (65) ஆகிய 6 பேரும் கோவை மாவட்டம், கிணத்துக்கடவை அடுத்த தாமரைக்குளத்தில் உள்ள உறவினர் வீட்டு துக்க நிகழ்வுக்கு ஜீப்பில் சென்றுள்ளனர். இதன்பின்னர் செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் ஊர் திரும்பியுள்ளனர். உடுமலையை அடுத்த மடத்துக்குளம் கருப்புசாமிபுதூர் அருகே வந்து கொண்டிருந்த போது,எதிரே வந்த சுற்றுலா வேன், ஜீப்பின் மீது மோதியது. இதில் தியாகராஜன், அவரது மனைவி ப்ரீத்தி, மகன் ஜெயபிரியன், தாய் மனோன்மணி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். அவரது தந்தை நாட்ராயன், மற்றொரு மகன் ஜீவப்பிரியன் ஆகியோர் இடிபாடுகளில் சிக்கி பலத்த காயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மடத்துக்குளம் காவல் துறையினர் இடிபாடுகளில் சிக்கிய இருவரையும் மீட்டு உடுமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு முதலுதவிக்குப் பின்னர் இருவரும் மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்த விபத்தில் சுற்றுலா வேனில் இருந்த கேரள மாநிலம்,பாலக்காட்டைச் சேர்ந்த 22 பேரில் 12 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டு உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

இது குறித்து மடத்துக்குளம் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சாம்சங் தொழிலாளர்கள் கைது: தலைவர்கள் கண்டனம்

சென்னை,அக்.9: சாம்சங் நிறுவனத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதற்கு அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி (அதிமுக): போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சாம்சங் தொழிலாளர்களை நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்தது கண்டிக்கத்தக்கது. போராட்டங்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்க முடியாமல், அடக்குமுறையால் ஒடுக்க முயலும் திமுக அரசுக்கு கண்டனம். உழைப்பாளர் தினத்தன்று நானும் தொழிலாளி என்று மேடையில் மட்டும் முழங்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், இதுபோன்ற ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கைவிட வேண்டும். தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, பேச்சுவார்த்தை மூலம் பிரச்னையை சுமுகமாக தீர்க்க வேண்டும்.

ராமதாஸ் (பாமக): சாம்சங் தொழிலாளர்கள் அமைதியாக போராட்டம் நடத்த எந்தத் தடையும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ள நிலையில், அதை மதித்து அவர்களின் போராட்டத்தை அனுமதிக்க வேண்டும். சாம்சங் நிறுவனத்துடன் பேச்சு நடத்தி அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரேமலதா (தேமுதிக): ஏழைப் பங்காளர் என்று தங்களை மார்தட்டிக்கொள்ளும் திமுக அரசு, உடனடியாக தொழிலாளர்களின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும்.

அன்புமணி (பாமக): திராவிட மாடல் அரசு என்பது எப்போதும் முதலாளிகளுக்கான அரசு தான் என்பதும், தொழிலாளிகளின் நலன் குறித்து அது ஒருபோதும் கவலைப்படாது என்பதும் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஜி.கே.வாசன் (தமாகா): சாம்சங் தொழிலாளர்களை நள்ளிரவில் வீடு புகுந்து காவல் துறையினர் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது. தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

தி.வேல்முருகன் (வாழ்வுரிமைக் கட்சி): சாம்சங் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் கோரும் அறப்போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதைக் கைவிட்டு, சாம்சங் தொழிலாளர் சங்கத்துக்கு பதிவுச் சான்றிதழ் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சீமான் (நாதக): அடிப்படை உரிமைகளுக்காக போராடும் தமிழக தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்காமல், தமிழக அரசு, 'சாம்சங்' நிறுவனத்திற்கு துணைபோவது கண்டனத்துக்குரியது.

கே. கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்): நியாயம் கேட்டு போராடும், அனைத்து தொழிலாளர்களையும் விடுவிப்பதுடன், சாம்சங் நிறுவனத்துடன் பேச்சு நடத்தி, பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும்.

வேளாண் துறையில் புதிதாக 125 பணியாளர்களுக்கு நியமன ஆணை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, அக். 9: வேளாண்மைத் துறையில் புதிதாக 125 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இது குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: திமுக தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல் வேளாண்மைத் துறையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. இதுவரை 1,937 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, வேளாண்மை உதவி அலுவலர் காலிப் பணியிடங்களுக்கு 83 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதேபோன்று பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 42 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் தலா 5 பேருக்கு பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், வேளாண்மைத் துறை செயலர் அபூர்வா, துறை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தங்கம் பவுனுக்கு ரூ.560 குறைவு

சென்னை, அக். 9: சென்னையில் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.560 குறைந்து ரூ.56,240-க்கு விற்பனையானது.

சென்னையில் தங்கத்தின் விலை திங்கள்கிழமை பவுனுக்கு ரூ.160 குறைந்து ரூ.56,800-க்கு விற்பனையான நிலையில், செவ்வாய்க்கிழமை விலையில் மாற்றமின்றி விற்பனையானது.

இந்நிலையில், புதன்கிழமை தங்கம் விலை கிராமுக்கு ரூ.70 குறைந்து 7,030-க்கும், பவுனுக்கு ரூ.560 குறைந்து56,240-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 குறைந்து ரூ.100-க்கும், ஒரு கிலோ(கட்டி வெள்ளி) ரூ.2,000 குறைந்து ரூ.1,00,000-க்கும் விற்பனையானது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நகராட்சி அலுவலகம், தென்காசி.

ந.க.எண்.993/2018/இ1 நாள்.04.10.2024

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் விபரப்படி உள்ள பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் அப்புறப்படுத்த 22.10.2024 தேதி பிற்பகல் 03.30 மணிக்கு நகராட்சி ஆணையாளர் அவர்கள் அல்லது அன்னாரின் அதிகாரம் பெற்ற அலுவலரால் நகராட்சி அலுவலகத்தில் வைத்து பகிரங்க பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏலம் விடப்படும். மேற்படி ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ரூ.25000/- ஏல வைப்புத் தொகையினை வங்கி வரைவோலை ஆணையாளர், தென்காசி நகராட்சி என்ற பெயரில் எடுத்து 21.10.2024 பிற்பகல் 04.30 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். வைப்புத் தொகையை பணமாக பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நேரடியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏலத்தில் கலந்து கொள்பவர்கள், இரண்டிற்கும் தனித்தனியாக ஏலக் காப்புதொகை செலுத்த வேண்டும். வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். எதிர்பாராதவிதமாக விடுமுறை நாட்கள் ஏற்படின் அதற்கு அடுத்த நாள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும். மேலும் பொது ஏலத்தினை யாதொரு காரணமும் காட்டாமல் ஒத்தி வைக்கவோ, நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

வ.எண்	வாகனத்தின் எண் விபரம்	வாகனத்தின் வகை
1	TN76B 1361	Bajaj Three Wheeler Goods
2	TN76B 1483	Bajaj Three Wheeler Goods
3	TN72Y 7078	Echier
4	TN72Z 2274	Swaraj Mazda
5	TN72X 4369	Swaraj Mazda

(ஒம்) சு.ரவிச்சந்திரன்.பி.ஏ.,
ஆணையாளர், தென்காசி நகராட்சி

வெ.ஆ.எண்.95/2024
செ.ம.தொ.அ.தெ.கா.9/10/2024

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்
சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

மத்திய அலுவலகம், 763, அண்ணா சாலை, சென்னை - 600002, தொலைபேசி: 044-71729730

சென்னையில் செயல்படும் வங்கி ஊழியர் பயிற்சிக் கல்லூரியின் உள்கட்டமைப்பைப் புதுப்பிக்கும் வகையில், முதன்மைச் செயல்திட்ட கட்டடக் கலை வல்லுநர் மற்றும் செயல்திட்ட மேலாண் ஆலோசகரை நியமிப்பதற்கான விருப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விரிவான விளம்பர அறிவிப்பானது, www.iob.in மற்றும் https://iobtenders.auctiontiger.net/EPROC/ ஆகிய வங்கி இணையதளங்களில் Tender Section என்ற தலைப்பின் கீழ் கிடைக்கிறது.

ஒப்பந்தப்புள்ளிக்கு விண்ணப்பிக்கும் கடைசி நாள்: 30.10.2024

நாள்: 10.10.2024 பொது மேலாளர்

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., பதிவு அலுவலகம் - ராதிகா, 2 வது தளம், லா கார்டன், நவ்ரங்புரா, அஹமதாபாத் - 09

கிளை அலுவலகம் - HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., புதிய எண். 104, (பழைய எண். 25), திருவனந்தபுரம் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 005

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(கடன்தாரர் / கூட்டு - கடன்தாரர் / பொது மக்களுக்கு)
(சர்ஃபாசி சட்டம்' 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை "இருக்கின்ற இடத்தில்" & "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துள்ளார்.

1) 1). விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி - 1). ஐஸ்வர்யா கிப்டுயல் ஸ்டேஷன், 3/312, குற்றாலம் பிரதான சாலை, மரண்டை, ஆலங்குளம், திருநெல்வேலி - 627 851, 2). இசக்கியம்மாள் S, 3/314, பிரதான சாலை, மரண்டை, ஆலங்குளம், திருநெல்வேலி - 627 851, 3). பால்துரை A, 3/314, பிரதான சாலை, மரண்டை, ஆலங்குளம், திருநெல்வேலி - 627 851., 4). சாந்தி A, 3/314, பிரதான சாலை, மரண்டை, ஆலங்குளம், திருநெல்வேலி - 627 851. கணக்கு எண். 7314807 மொத்த நிலுவைத்தொகை - 03.07.2024 ம் தேதியின் படி, ரூ. 56,00,847 (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சத்து எட்டுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்) மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிகழ் செலவுகள் / செலவுகள் ஆகியன. ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் - இல்லை

அசையா சொத்துக்களின் விபரங்கள்

அடமான சொத்து I - தென்காசி பதிவு மாவட்டம், ஆலங்குளம் சார் பதிவு அலுவலகம், ஆலங்குளம் பஞ்சாயத்து ஒன்றிய எல்லைக்குட்பட்ட, மாறந்தை பஞ்சாயத்து, மாறந்தை கிராமம், நத்தம் சர்வே எண். 980 ல் அமையப்பெற்ற 7.10 ஏக்கர் (2.87.50 ஹெக்டேர்) மொத்த பரப்பில் உள்ள 3 ஏக்கர் 10 சென்ட்டின் நடுப்பகுதியில் உள்ள 4500 சதுர அடி., இதன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கும், தெற்கும் - 50 அடி., தென்வடல் கிழக்கும், மேற்கும் - 90 அடி., மொத்த பரப்பு 4500 சதுர அடி (418.060 சதுர மீட்டர்) மற்றும் அதில் உள்ள கதவு எண். 3/310 மற்றும் மின் இணைப்பு எண். 07-019-00-220, குளியலறை, கழிவறை, 1 ஹெச் பி சப்மர்ஸிபிள் மோட்டார் ஆகியவற்றுடன் கூடிய வீடு. எல்லைகளாவன - வடக்கு - கிழமேல் சாலை (திருநெல்வேலி - தென்காசி சாலை) தெற்கு - சாந்திக்கு சொந்தமான காலி மனை, கிழக்கு - சாந்திக்கு சொந்தமான மனை, மேற்கு - சாந்திக்கு சொந்தமான மனை.

அடிப்படை விலை	டேவணித்தொகை	ஏல அதிகரிப்பு தொகை	ஏல தேதி & நேரம்	டேவணித்தொகைக்கான கடைசி தேதி & நேரம்
ரூ. 28,46,844/-	ரூ. 2,84,684/-	ரூ.1,00,000/-	29.10.2024 காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	28.10.2024 மாலை 06.00 மணி வரை

அடமான சொத்து II - தென்காசி பதிவு மாவட்டம், ஆலங்குளம் சார் பதிவு அலுவலகம், ஆலங்குளம் பஞ்சாயத்து ஒன்றிய எல்லைக்குட்பட்ட, மாறந்தை பஞ்சாயத்து, மாறந்தை கிராமம், நத்தம் சர்வே எண். 980 ல் அமையப்பெற்ற 7.10 ஏக்கர் (2.87.50 ஹெக்டேர்) மொத்த பரப்பில் உள்ள 3 ஏக்கர் 10 சென்ட்டின் நடுப்பகுதியில் உள்ள 15 சென்ட் மற்றும் அதில் உள்ள கதவு எண். 3/314 மற்றும் மின் இணைப்பு எண். 07-019-00-29, குளியலறை, கழிவறை ஆகியவற்றுடன் கூடிய வீடு. எல்லைகளாவன - வடக்கு - திருநெல்வேலி - தென்காசி சாலை, தெற்கு - கணேசனுக்கு சொந்தமான கட்டிடம், கிழக்கு - செல்லப்பாவுக்கு சொந்தமான இடம், மேற்கு - பால்துரைக்கு சொந்தமான வீடு.

அடிப்படை விலை	டேவணித்தொகை	ஏல அதிகரிப்பு தொகை	ஏல தேதி & நேரம்	டேவணித்தொகைக்கான கடைசி தேதி & நேரம்
ரூ. 24,55,608/-	ரூ. 2,45,560/-	ரூ.1,00,000/-	29.10.2024 காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	28.10.2024 மாலை 06.00 மணி வரை

விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் -

(1). ஏல விற்பனையானது வலைதளம் https://www.bankeauctions.com மூலம் "Online e-auction" வாயிலாக இதன் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் எல்லையில்லா 5 நிமிட கால நீட்டிப்புடன் நடத்தப்படும்.

(2). விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் https://www.bankeauctions.com மூலம் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். [illegible] ஆடிப்படை விலையின் 10% தொகையை டேவணித்தொகையாக டி.டி/ பே ஆர்டர் மூலம் / "HDB Financial Services Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். [illegible] NEFT/ RTGS [illegible] பான் அட்டை, [illegible] https://www.bankeauctions.com [illegible] சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், [illegible] ஹைதராபாத் - 500 038 [illegible] திரு ப. சுப்பாராவ், [illegible] subbarao@bankeauctions.in [illegible] 8142000061 [illegible] 9515160064, தொலைபேசி எண் : 040-23736405, அலைபேசி : 8142000062/66, info@bankeauctions.in [illegible]

(3). [illegible]

(4). விருப்பமுள்ள ஏலதாரர்கள், மேலாளர், HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., புதிய எண். 104, (பழைய எண். 25), திருவனந்தபுரம் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு - 627 005 [illegible] HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., புதிய எண். 104, (பழைய எண். 25), திருவனந்தபுரம் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு - 627 005

(5). [illegible] அடிப்படை விலையின் 10% ஐ "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையாக [illegible] 28.10.2024 அன்று மாலை 04.00 மணி அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

(6). [illegible] M/s. HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., புதிய எண். 104, (பழைய எண். 25), திருவனந்தபுரம் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தமிழ்நாடு - 627 005 - திரு. அகிலேஷ் M (8220334459), திரு. T. சிபின் (9944828077) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். [illegible]

(7). [illegible] 29.10.2024 அன்று காலை 10.30 மணி [illegible]

(8). [illegible] HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட் - ன் [illegible]

(9). [illegible] 25% [illegible] 75% [illegible] 15 [illegible] 25% [illegible]

(10). [illegible]

(11). [illegible]

(12). [illegible] TDS, GST [illegible]

(13). [illegible]

இடம் : திருநெல்வேலி, தேதி : 09.10.2024 அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்.

sf | சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

அ) வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றம்:

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் KFIN டெக்னாலஜிஸின் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றத்தை குறித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இது சுந்தரம் பரஸ்பர திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பூர்வ மையமாகும்

தற்போதுள்ள முகவரி	புதிய முகவரி	நடைமுறைப்படுத்திய தேதி
KFIN டெக்னாலஜிஸ் லிமிடெட் தரை தளம், திரிவேணி வளாகம், ரத்தங்கஞ்ச், எஸ்பிஐ லைஃப் அருகில், மிர்சாபூர், உத்தரப் பிரதேசம் - 231001. இந்தியா	KFIN டெக்னாலஜிஸ் லிமிடெட், இரண்டாவது தளம், திரிவேணி வளாகம், ரத்தங்கஞ்ச், மிர்சாபூர், உத்தரப் பிரதேசம் - 231001. இந்தியா	அக்டோபர் 11, 2024

திட்டத் தகவல் ஆவணம் (கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை (கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் (SAI) அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: அக்டோபர் 10, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட் (சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்) CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014. தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு) www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

அறிவிப்பு

sf | சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் போர்ட்ஃபோலியோ வெளிப்பாடு

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் யூனிட்ஹோல்டர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால் SEBI (மியூச்சுவல் ஃபண்டுகள்) விதிமுறைகள், 1996 இன் விதிமுறை 59A இன் படி ஜூன் 5, 2018 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். SEBI/HO/IMD/DF2/CIR/P/2018/92, செப்டம்பர் 30, 2024 இல் முடிவடைந்த அரையாண்டுக்கான நிதியத்தின் திட்டங்களின் போர்ட்ஃபோலியோ அறிக்கை சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.sundarammutual.com மற்றும் AMFI இன் இணையதளத்தில் அதாவது www.amfiindia.com.

மேலும், யூனிட்ஹோல்டர்கள் போர்ட்ஃபோலியோவின் அறிக்கையை எழுத்துப்பூர்வமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ கோரலாம். இந்தத் திட்டங்களின் அறிக்கையை, எங்களுக்கு customerservices@sundarammutual.com இல் எழுதுவதன் மூலம் அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடிகளில் இருந்து அல்லது பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் மூலம் எங்கள் தொலை பேசி எண் 1860 425 7237 ஐ அழைப்பதன் மூலம் அல்லது நிதியின் அருகிலுள்ள ஏதேனும் கிளைகளில் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிப்பதன் மூலம் (ISCs) கோரிக்கையை பதிவு செய்யலாம். (எமது கிளைகளின் பட்டியலை அறிய தயவு செய்து எங்கள் வலைத்தளத்தைப் பார்க்கவும் www.sundarammutual.com).

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: அக்டோபர் 10, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட் (சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்) CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014. தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு) www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

தவறிவிட்டது

எனது கணவர் தனது வாரிசுகளுக்கு எழுதி வைத்து என் கைவசம் இருந்த தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை சார்பதிவகம் பதிவு செட்டில்மெண்ட் ஆவண எண்.1108/1974 மற்றும் பதிவு நன்கொடை ஆவண எண்.671/1986 ஆகியவை கடந்த 15-08-2024 அன்று பாளையங்கோட்டை, வண்ணார்பேட்டை TVS பெட்ரோல் பங்க் எதிரே உள்ள ஜெராக்ஸ் கடைக்கு வந்தபோது தவறிவிட்டது. மேற்படி இரண்டு ஆவணங்களையும் கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கவும்.

ரா.இராஜலெட்சுமி
க.பெ. சு.ராமசாமி
எண். 1/36, வடக்கு தெரு,
ராமசாமியாபுரம்,
திம்மராஜபுரம்,
தூத்துக்குடி 628102
செல் : 96779 70373

நாள் : 09.10.2024
இடம் : பாளையங்கோட்டை

தவறிவிட்டது

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை சார்பதிவாளர் அலுவலகம் ஆவணம் எண். 2611/1994, நாள் 13.12.1994 கொண்ட எனது பெயரிலுள்ள இஷ்டதான பத்திரம் (அசல்) 07.10.2024 அன்று கோதநல்லூர் கிராம அலுவலகத்திற்கு சென்றபோது மேக்காமண்டபத்தில் வைத்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் எனது முகவரியில் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
M.விபின் ஆன்றோ, (வயது 32)
த/பெ.A.மிக்கேல் ராஜ்,
க.எண். 9-240-2, பாளையம்,
மேக்கோடு & அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.
மொபைல் எண் : 7418957277.